# மூன்றாவது இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய கடல்சார் பாதுகாப்பு உரையாடல்

அக்டோபர் 05, 2023

3வது இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய கடல்சார் பாதுகாப்பு உரையாடல் 5 அக்டோபர் 2023 அன்று பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றது. இந்தியக் குழுவுக்கு, வெளியுறவு அமைச்சகத்தின் ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு விவகாரங்களுக்கான இணைச் செயலர் திருமதி முவன்புய் சாயாவி தலைமை தாங்கினார். அதேநேரத்தில், ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவிற்கு ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவை பிரிவின் இயக்குனர் ஜோன்னெக் பால்ஃபோர்ட் தலைமை தாங்கினார்.

உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் உலகளாவிய நல்வாழ்வுக்கு உகந்த கடல்சார் சூழலை நிலைநிறுத்துவதற்கான வழிகள் குறித்து இரு தரப்பினரும் ஆலோசனை நடத்தினர். கடல்சார் களத்தில் நடந்து வரும் ஒத்துழைப்பு முயற்சிகள் மற்றும் விரிவான கடல்சார் பாதுகாப்பிற்கான சர்வதேச மற்றும் பிராந்திய வழிமுறைகளை வலுப்படுத்துவதற்கான வழிகளை அவர்கள் மதிப்பாய்வு செய்தனர். சட்டவிரோத கடல்சார் நடவடிக்கைகளை எதிர்த்தல், கடல்சார் சட்ட அமலாக்கம் மற்றும் திறனை வளர்ப்பது போன்ற பகுதிகளில் தங்கள் பகிரப்பட்ட முயற்சிகளை வலுப்படுத்துவதற்கான வழிகளை அவர்கள் ஆராய்ந்தனர். கடல்சார் கள விழிப்புணர்வை மேம்படுத்துவதில் ஒத்துழைப்பது குறித்தும் அவர்கள் விவாதித்தனர் மற்றும் வரவிருக்கும் இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய கடல்சார் ஈடுபாட்டை எதிர்நோக்கியுள்ளனர்.

பேச்சுவார்த்தையின் அடுத்த சுற்றை பரஸ்பரம் வசதியான தேதியில் நடத்த ஒப்புக்கொள்ளப்பட்டது.

**பிரஸ்ஸல்ஸ்**
**அக்டோபர் 05, 2023**